ஸ்ரீ திரிபுரஸுந்தரீ ஸமேத சந்திரமௌளீசுவராய நம:.

ஆர்ய தர்மம்.

परित्यक्त्वा देवान् विविधविधसेवाकुलतया
मया पञ्चाशीतेरधिकमपनीते तु वयसि ।
इदानीं चेन्मातस्तव यदि कृपा नापि भविता
निरालंबो लंबोदरजननि कं यामि शरणम् ॥

देवीस्तोत्रे ॥

எவ்வித சிரேயஸ்ஸையும் அளிக்கும் மஹிமை பொருந்திய தேவதைகளை ஒருசமயமும் நினைக்காமல் குடும்ப பாரணத்தையே பெரிதாய்க்கருதி இவ்விதமென்று கூறுவதற்கியலாத பலவாறான செய்கைகளைச் செய்துகொண்டு 85 வயதுக்கதிகமான வயது இதுவரையில் ஆகிவிட்டது. இவ்வளவு வயதுசென்ற பிறகு இந்தச் சரீரத்தைக்கொண்டு எவ்வித நற்கர்மாவையும் நான் செய்ய சக்தியற்றவனாயிருக்கிறேன். ஆகையால் ஹே மாத:! ஸகலப் பிராணிகளுக்கும் அன்னையாய் விளங்கும் ஹே பரமேசுவரி! இந்த சமயத்தில் உன்னுடைய கருணையானது என்னிடம் வராமலிருக்குமாகில், விநாயகக்கடவுளின் மாதாவே! ஒருவிதமான பிடிப்புமற்ற நான் யாரைச் சரணமாக அடைவேன்.

ஒருவர் தன் வாழ்நாட்களை பூராவையும், உலக வியவகாரத்தில் போக்கிவிட்டு அதிக வயதாய் சரீரத்தில் சக்தி குன்றியகாலத்தில் பரலோகம் ஒன்றுண்டென்று தோன்றி அங்கு அடையவேண்டிய சுகத்திற்குற்ற ஸாதனங்களை இனி நம்மால் அனுஷ்டிக்க முடியாதென்று ஸ்ரீ பரதேவதையைச் சரணாகதியடைந்து தன்னுடையமுட்டாள்தனத்தையறிவித்துப் பாதுகாக்கவேண்டுமென்று பிரார்த்திக்கிறார். இதனால் நாமும் நமது காலத்தை வீண் பண்ணாமல் இப்பொழுது முதலே பரலோக சிரேயஸ்ஸிற்கு வேண்டிய காரியங்களை நன்கு கவனித்து அனுஷ்டித்து ஜன்ம ஸாபல்யத்தை அடையவேண்டுமென்று அறிவிக்கப்படுகின்றது.

ஆர்யதர்மம் உபபத்திராதிபர்.

ஆர்ய தர்மம்.

குரோதன-ஸு ஆடி-மீ ௨௨௳

வேதாந்த ஸாரம்.

(௪௱௯-வது பக்கத்தொடர்ச்சி.)

சார்வாகர்களுக்குள் வேறு சிலரின் அபிப்பிராயம்.

निश्चयं दूषयत्यन्योसहमानः पृथग्जनः ।

இவ்விதம் இந்திரியங்களே ஆத்மாவென்று தீர்மானிக்கப் பட்டதை வேறான சிலர், அது சரியல்லவென்று அடியில் காட்டும் காரணங்களால் தூஷிக்கின்றார்கள்.

इन्द्रियाणि कथन्न्वात्मा करणानि कुठारवत् ।
करणस्य कुठारादेश्चेतनत्वं नहीक्ष्यते ॥

श्रुत्याधिदेवतामेव इन्द्रियेषूपचर्यते ।
न तु साक्षादिन्द्रियाणां चेतनत्वमुदीर्यते ॥

மரம் முதலியவைகளை வெட்டுவதற்குக் கோடரிபோல் இந்திரியங்கள் கரணங்கள். கரணங்களான கோடரி முதலியவைகளுக்கு எங்காகிலும் சேதனத்வம் காணப்படுகின்றனவா? (**प्राणा ऊचुः**) பிராணன்கள் மொழிந்தன என்கிற சுருதிக்கு இந்திரியங்கள் என்று பொருளல்ல. பின்னே இந்திரியங்களுக்கு தேவதைகளான வாயு முதலானவர்களைக் கூறவேண்டி அவரவர்களுக்கு அதிஷ்டானமான இந்திரியங்களைக் கௌணமாகச் சொல்லியிருக்கிறதெனக் கருத்துக்கொள்ளவேண்டும். அவ்விதமின்றி இந்திரியங்களுக்கே ஸாக்ஷாத்தாகச் சேதனத்வம் சுருதியால் கூறப்படவில்லை.

अचेतनस्य दीपादेरर्थाभासकता यथा ।
तथैव चक्षुरादीनां जडानामपि सिध्यति ॥५४६

ஜடங்களான தீபம்முதலியவைகளுக்கு ஒருவஸ்துவை அறிவிக்கும் தன்மையானது எங்ஙனம் அவைகளின் அதிதேவதைகளால் ஸித்திக்கின்றதோ அங்ஙனமே ஜடங்களான கண்முதலியவைகளுக்கும் ஸித்திக்கின்றது. 'நான் செவிடன், நான் குருடன் என்கிற அனுபவம் அத்யாஸத்தாலேற்படுகின்றதே தவிர உண்மையன்று. ஆகையால் இந்திரியங்களை ஆத்மாவாகச் சொல்லக் கூடாது' என்று மறுத்து மற்றும் சில சார்வாகர்கள் கூறுகின்றதாவது,

பிராணன்தான் ஆத்மா.

इन्द्रियाणां चेष्टयिता प्राणोऽयं पञ्चवृत्तिकः ।
सर्वावस्थास्ववस्थावान् सोऽयमात्मत्वमर्हति ।
अहं क्षुधावान् तृष्णावानित्याद्यनुभवादपि ॥

இந்திரியங்களை வேலை செய்யும்படி செய்கிறவனும் "நான் பசியுள்ளவன், நான் தாகமுடையவன்" என்கிற அனுபவமிருப்பதாலும் எவ்வித அவஸ்தைகளிலுமிருப்பவனும் ஐந்துவிதமான வியாபாரங்களையுடையவனுமான இந்த வாயுவைத்தான் ஆத்மாவாகக் கருதவேண்டும்.

श्रुत्यान्योऽन्तर आत्मा प्राणमय इतीर्यते यस्मात् ।
तस्मात् प्राणस्यात्मत्वं युक्तं नोकरणसंज्ञानां क्वापि ॥ १५४६

'இந்திரியங்களைக்காட்டிலும் வேறான உள்ளிருக்கும் பிராணமயன்தான் ஆத்மா' என்று சுருதியாலும் சொல்லப்படுகிறபடியால் 'பிராணன்தான் ஆத்மாவாகிறான்' என்று கூறுகிறார்கள்.

சார்வாகர்களுள் மற்றும் சிலர் இந்த ஸித்தாந்தத்தை அங்கீகரிக்காமல் வேறுவிதம் அடியில்வருமாறு அபிப்பிராயப்படுகிறார்கள்.

"अन्योऽन्तर आत्मा मनोमयः" इत्यादिश्रुतेः । मनसि सुप्ते प्राणादेरभावात् अहं विकल्पवान् इत्याद्यनुभावाच्च मन एव आत्मेति वदति ।

'பிராணனைக்காட்டிலும் வேறான மனஸ்தான் ஆத்மா' என்று சுருதியிருப்பதாலும் மூர்ச்சையடைந்த மனம் நித்திரை செய்யும் பொழுது பிராணன் முதலானவைகள் இல்லாமையாலும் 'நான் சங்கற்பத்தை யுடையவன், நான் விகற்பத்தையுடையவன்' என்று அனுபவமிருப்பதாலும் மனம்தான் ஆத்மாவாகும்.

இவ்விதம் சில மூடர்கள் கருதுகிறார்கள் என்பதை நமது பரமாசார்யாளும் அறிவிக்கிறார்கள்.

इति निश्चितमेतस्य दूषयत्यपरो जडः ।
भवत्यात्मा कथं प्राणो वायुरेवैष आन्तरः ॥५४७

பிராணன்தான் ஆத்மாவென்று சில வாதிகளால் தீர்மானிக்கப்பட்டதை மற்றும் சில ஜடர்கள் உள்ளிருக்கும் வாயுரூபமான இந்தப் பிராமணன் எப்படி ஆத்மாவாக முடியும்?

மேலும்,

बहिर्यात्यन्तरा याति भस्त्रिकावायुवन्मुहुः ।
न हितं वा हितं वा स्वमन्यद्वा वेद किंचन ॥ ५४८

துருத்தி என்கிறதோல் பையிலுள்ள வாயுபோல் அடிக்கடி வெளியில் வருவதும் உட்செல்வதுமாயிருக்கும் இந்தப் பிராணன் தன்னுடைய ஹிதத்தையோ அஹிதத்தையோ மற்றுமுள்ளதையோ அற்பங்கூட அறிய சக்தியற்றவன்.

जडस्वभावश्चपलः कर्मयुक्तश्च सर्वदा ।
प्राणस्य भानं मनसि स्थिते सुप्ते न दृश्यते ॥

இந்தப் பிராணன் ஜடன்; சஞ்சல ஸ்வபாவமுடையவன்; எப்பொழுதும் கர்மாவோடு கூடியவன். மனது பிரகாசித்துக் கொண்டிருந்தால் இவனுக்குப்பிரகாசம். இல்லாவிட்டால் இல்லை.

ஆகையால்,

मनस्तु सर्वं जानाति सर्ववेदनकारणम् ।
यत्तस्मान्मन एवात्मा प्राणस्तु न कदाचन ॥

எல்லாவற்றையும் மனதே அறிகின்றபடியாலும், பிறர்கள் அறிவதற்கும் காரணமாயிருப்பதாலும் அதுவே ஆத்மாவாகும். பிராணன் ஒருகாலும் ஆத்மாவாகமாட்டான் என்று கூறுகின்றார்கள்.

(தொடரும்)

ஆர்யதர்மம் உப பத்திராதிபர்.

வேதங்கள் அபௌருஷேயமானவை.

வேதம் என்று ஏன் பெயர்?

தைத்திரீய சுருதியில் "வேதத்தை அறியாதவன் பரமாத்மாவை அறிகிறதில்லை" என்றும், கடோபநிஷத்தில் "இந்த ஞானமானது அனுமானத்தினால் உண்டாகாது..." என்றும், பிப்பலாத சுருதியில் "இந்திரியங்கள் (பிரத்யக்ஷம்) இவனைத் தெரிவிப்பதில்லை. அனுமானமும் தெரிவிப்பதில்லை. வேதங்கள்தான் இவனைத் தெரிவிக்கின்றன. ஆகையால்தான் வேதங்கள் என்று சொல்கிறார்கள்" என்றும் சொல்லப்பட்டிருப்பதால் **वेदयन्तीति वेदाः** என்று, ஈசுவரனின் ஸ்வரூபத்தை தெரிவிப்பதினால்தான் வேதம் என்று பெயர். அல்லது வராஹபுராண வசனத்தின்படி "**वेदास्ते नित्यविन्नत्वात्**" நித்யம் (சாசுவதமாய்) இருப்பதால் வேதம் என்று பெயர்.

வேதத்தின் நாமாந்திரங்களும் அவைகளின் காரணமும்.

வேதத்திற்கு ஆகமம், சுருதி, திருஷ்டி, ஆம்னாயம் என்ற மறு பெயர்கள் உண்டு. **आ गमयति** நன்றாய் பகவானைத் தெரிவிக்கிறது. ஆகையால் ஆகமம். பிரஹ்மாண்டபுராணம்,

> **यतस्ता हरिणा दृष्टाः श्रुता एवापरैर्जनैः ।**
> **श्रुतयो दृष्टयश्चेति तेनोच्यन्ते पुरातनैः ॥**

விஷ்ணுவால் பார்க்கப்படுகின்றமையால் 'திருஷ்டி' என்றும், இதரர்களினால் கேட்கப்படுவதால் (செவிகளால்) 'சுருதி' என்றும் பெயர். வராஹ புராணம்,

> **...................श्रुतयश्चाखिलैः श्रुतेः ।**
> **आम्नायोऽनन्यथापाठादीशबुद्धिस्थिताः सदा ॥**

சென்ற கல்பங்களில் வேதபாடம் எப்படியிருந்ததோ, அவ்வண்ணமே இருப்பதால் ஆம்னாயம் என்றும் பெயர். இந்நாமங்கள் அனைத்தும் காரணப்பெயர் என்று சொல்லலாம்.

பிரிவுகள்.

ஸ்ரீ வேதவியாஸர் அவதாரத்திற்குப் பிறகு ரிக், யஜுஸ், ஸாமம், அதர்மம் என்று 4 பிரிவுகள் ஏற்பட்டனவென்றும் பூர்வத்தில் ஒரே வேதம்தான் இருந்தது என்று பலர் நினைப்பது தவறு. ஸ்காந்தபுராணம்,

अवतीर्णो महायोगी सत्यवत्यां पराशरात् ।
उत्सन्नान्भगवान्वेदानुज्जहार हरिः स्वयम् ॥

"ஸ்ரீ வேதவியாஸர் ஸத்யவதியினிடம் அவதரித்து அபபாடாதிகளால் திரோஹிதமான வேதங்களை உத்தாரம் செய்தார்" திரோஹிதமான வேதங்களை என்று பன்மை இருப்பதால் பூர்வம் வேதங்கள் நான்காகவே இருந்தனவென்று ஏற்படுகிறது. ரிக் பாஷ்யம்,

चतुर्धा व्यभजत्तांश्च ....
ऋचः स ऋच उद्धृत्य ऋग्वेदं कृतवान्प्रभुः ।
यजूंषि निगदाच्चैव तथा सामानि सामतः ॥

(முன்னமேயே இருந்த) ரிக் வேதத்திலிருந்து ஒரு ராசியை எடுத்து ரிக் வேதத்தையும், நிகதம் என்னும் கூட்டத்திலிருந்து ஒரு ராசியை எடுத்து யஜுர் வேதத்தையும், ஸாமவேதத்திலிருந்து ஸாமவேதத்தையும் செய்தார்" இவ்விரண்டு பிரமாணங்களாலும் வேதவியாஸருக்கு முன்னமேயே வேதம் நான்கு வகையாயிருந்ததென அறியவேண்டும். எனவே முதலிலிருந்த 4 வேதங்களுக்கு மூலவேதங்கள் அல்லது மகாவேதங்கள் என்றும் வேதவியாஸர் உத்தாரம் செய்த 4 வேதங்களுக்கு உபவேதங்கள் என்றும் பெயர் வழங்குகிறது. ஸ்ரீ வியாஸர் இக்கலியுகத்தில் ஜனங்களின் ஆயுளையும், புத்தியையும், தொழிலையும் மனதிற்கொண்டு அனைவரும் அத்யயனம் செய்யும்பொருட்டு,

.... चतुर्विंशतिधा पुनः ।
शतधाचैकधाचैव तथैव च सहस्रधा ॥
कृष्णो द्वादशधाचैव .... ।

என்கிற ஸ்காந்தபுராண வசனத்தின்படி ரிக் வேதம் முதலிய நான்கையும் முறையே 24, 101, 1000, 12 உட்பிரிவுகளாகவும் விபாகம் செய்தார். இப்பேர்ப்பட்ட வேதங்கள் அபௌருஷேய மானவை. அதாவது, ஒரு புருஷனாலும் உண்டாக்கப்பட்டவை அல்ல. அவைகளை இயற்றிய ஆசிரியரோ இல்லை. ஈசுவரனைப் போல் அனாதிகாலம் தொடங்கி ஸ்வதந்திரமாக உள்ளனவென்று தாத்பரியம்.

வேதங்கள் பிரமாணமானவையா?

இவைகள் பிரமாணமாயிருந்தாலல்லவா பௌருஷேயமா அபௌருஷேயமா யென்று விசாரிக்கவேண்டும். "புத்திரனை அபேக்ஷிக்கிறவன் புத்திரகாமேஷ்டி செய்யவேண்டும்" என்பது ஒரு சுருதி. இதனால் புததிரகாமேஷ்டி புத்திரன் பிறப்பதற்கு காரணம் என்று ஏற்படுகிறது. அந்த யாகம் செய்தால் புத்திரன் பிறப்பான் என்று வேதம் கூறுகிறது. நம் அனுபவத்தில் புத்தி ரேஷ்டியை செய்யாத நம்மில் பலருக்கு ஸந்தான பாக்கியம் ஏற் பட்டிருக்கிறது. அதைச் செய்து புத்திரனைப்பெறுமல் பலர் ஏமாந்திருக்கிறார்கள். இவ்வாறு வேதத்தின்சொல் தவறிப்போவ தால் அப்ரமாணம்என்றால்; ஸமாதானம்:—வேதத்தில் சொல்லப் பட்டதை முறைதவறாது செய்தால் ஒருபோதும் நிஷ்பலமாகாது. புத்திரகாமேஷ்டி செய்தால் புத்திரன் பிறந்துவிடுகிறான் என்று வேதம் சொல்கிறதேயென்று திரிகுல சுத்தி, திரிகரண சுத்தி, பக்தி முதலிய அங்கங்களை முற்றிலும் மறந்துவிட்டால் மனோ பீஷ்டம் நிறைவேறுமா? ஆகையால் புத்திரனைப் பெறாது ஏமாந் தவர்கள் தங்களிடமுள்ள அனாசாரமோ அல்லது பக்தியின்மை யோ அதற்குக் காரணம் என்று நன்குணரவேண்டுமேயல்லாது வேதம் சொல்வது அப்ரமாணம் என்று தூஷிக்கலாகாது. யாகத் தையே செய்யாமலே புத்திரப்பேறை அடைந்திருக்கிறார்களே என்றால், யாகம் செய்யாவிட்டால் புத்திரபாக்கியம் கிடைக்கா தென்று வேதம் கூறவில்லை. பின்னை, புத்திரபாக்கியத்தைப் பெற பல காரணங்களுண்டு. தோஷத்தினால் ஏற்படாமலுமிருக் கும். அவ்விதம் இருப்பவர்களுக்கு யாகத்தால் தோஷ நிவர்த்தி ஏற்பட்டு புத்திரபாக்கியம் உண்டாகும் என்று வேதம் கூறுகின்

றது. மற்றவர்களும் தங்களுடைய அதிருஷ்டாந்தரத்தினுல் புத்திரன் பிறந்தான் என்றும் அறிந்து வேதம் பிரமாணமென்றே கொள்ளல்வேண்டும். இரண்டாவதாக, "மண் பேசிற்று, ஜலம் பேசிற்று" என்பது ஒரு வேதவாக்கியம். ஜடமான மண்ணும் கல்லும் பேசுமா? இதென்ன விந்தை! இவ்வாறுன அஸம்பாவிதங்களை வேதம் சொல்வதால் பிரமாணமாகுமா? ஸமாதானம் உலகத்திலுள்ள ஸகல சேதனுசேதன வஸ்துக்களுக்கும் அபிமானி தேவதைகள் உண்டு. மண்ணுக்கும் ஜலத்துக்கும் அபிமானிகளான தேவதைகள் சேதனர்களேயாதலால், பேசவும் நடமாடவும் சக்தியுள்ளார். மண் பேசிற்று என்றவிடத்தில் அதனபிமானி தேவதை பேசிற்று என்று அர்த்தம். ஆகையால் எவ்வித அஸம்பவமும் இல்லை. (பிரம்ம சூத்திரம் 2-ம் அத்தியாயம் 1-ம் பாதம் 6, 7 சூத்திரங்களில் காண்க.) மூன்றுவதாக, "உதயமானவுடன் ஹோமம்செய்யவேண்டும்" என்பது ஒருவேதவாக்கியம். உதயத்திற்குமுன் ஹோமம்செய்யவேண்டுமென்று மற்றொரு சுருதியும்கூறுகின்றது. இதுமுன்பின் விருத்தமாயிருக்கிறது. உதயமானவுடன் செய்யவேண்டும் என்றுல், உதயத்திற்குமுன் செய்யலாகாதென்று ஆயிற்று. அடுத்தாற்போல்உதயத்திற்குமுன் செய்யவேண்டும் என்றிருப்பதால் அப்ரமாணம். ஸமாதானம். நமக்கு முன்பின்பார்த்து விரோதமன்னியில் அர்த்தம் சொல்லவாராதே தவிர, சுருதி ஒருபோதும் முன்பின் விருத்தமல்ல. ஹோமம் செய்யும் அதிகாரிகளில் சிலர் ஹோமம் செய்யும் காலம் வேறு, மற்றும் சிலரின் காலம் வேறு. உதயத்திற்குமுன் ஹோமம் செய்யவேண்டிய அதிகாரிகளை அக்காலத்தில் செய்யும்படியும் உதயமானவுடன் செய்யவேண்டியவர்களை அவர்களுக்குறிய காலத்தில் செய்யும்படியும் வேதம் விதிக்கிறபடியால் யாதொரு தோஷமுமில்லை. ஒருவனையே உத்தேசித்து அவ்விதம் சொல்லியிருப்பின் முன்பின்விருத்தமாகும். நான்காவது ஒரு வேதசாகையில் சொல்லப்பட்டதையே மற்றோர் சாகையிலும் சொல்கிறது. சொன்னதையே திருப்பித்திருப்பிச் சொல்வதால் வேதம் அப்ராமாணம். ஸமாதானம். ஒரு விஷயத்தை திருப்பித்திருப்பிச் சொல்வது முற்றிலும் பிரயோசனமற்றதல்ல. ஏனெனின் அவ்விஷயம்

பிறர் மனதிற் பதியும்படி பன்முறை சொல்லவேண்டியிருக்கிறது. அல்லது சொல்பவருக்கு அவ்விஷயத்தில் ஊக்கம் உண்டென் பதை தெரிவிக்க பலமுறை சொல்லவேண்டும். இதற்கிணங்க "Repetition is the mother of studies" என்ற ஆங்கிலப் பழமொழியும் புனருக்தி அவசியம் என்று வற்புறுத்துவதால் வேதத்தில் ஒரு விஷயம் பலமுறை சொல்லப்படுவதால் தோஷ மில்லை. ஐந்தாவது, வேதத்தில் அர்த்தமேயில்லாத சொற்கள் இருக் கின்றன. ஆகையால் வேதம் அப்ரமாணம். இதற்கு ஸமாதானம். ஒரு பதத்தின் பொருள் நமக்குத் தெரியாவிடில் அப்பதத்திற்கே அர்த்தமில்லை என்று சொல்வது ஸஹஜம். வேதவார்த்தைகளுக்கு அர்த்தமில்லை என்றால் ஆடத்தெரியாதவள் போலல்லவா! கடை சியாக, "அக்நி குளிருக்கு மருந்து" என்பது ஒரு வேதவாக்யம். இவ்வுண்மையை பிரத்யக்ஷப் பிரமாணத்தாலேயே அறியலாம். ஒரு பிரமாணத்தால் ஸித்தமானதை வேதம் சொல்வதால் அப்ர மாணமெனலாம். இதற்கு ஸமாதானம். ஒரு பிரமாணத்தால் ஸித்த மான விஷயத்தை மற்றோர் பிரமாணமும் ஸாதித்தால் அதன் உண்மை அதிகமாகுமேயொழிய வேறில்லை. உதாரணமாக ஒரு மலைமீதிருந்து புகை வெளிக்கிளம்புவதைக் கண்ணுற்ற ஒருவன் தன் நண்பனுக்கு "அம்மலையில் அக்நி இருக்கிறது—புகை வருவ தால்" என்ற அநுமானத்தால் போதித்தான். பிறகு இருவரும் அப்பர்வதத்தை நேரில் பார்வையிட்டனர். பிரத்யக்ஷமாயும் அக் நியைக் கண்டார்கள். இங்கு அநுமானத்தினால் ஸாதிக்கப்பட்ட விஷயத்தின் உண்மை பிரத்யக்ஷத்தினால் திருடமாக்கப்பட்டது. முடிவாக, வேதம் ஒருபொழுதும் அப்ரமாணமல்ல. அவ்வண்ணம் கனவிலும் நினைக்கலாகாது. மேல் வாரியாகப் பார்க்கும்போது சில காரணங்களினால் அப்ரமாணம் என்று தோன்றினாலும் தீர ஆராய்ந்துபார்த்தால் உண்மை புலப்படும்.

ஒரு புருஷனால் இயற்றப்பட்ட நூலாயிருந்தால் "To err is human" மனிதன் தப்புவது ஸஹஜம் என்றபடி குற்றங்குறை களிருக்க அவகாசமுண்டு. அக்ஞானத்தினாலோ விபரீதஞானத் தாலோ ஸாமர்த்திய மின்மையாலோ புருஷநிர்மித கிரந்தங்களில் தோஷம் ஏற்படலாம். வேதமோ அபௌருஷேயமானது புருஷ

நிமித்தமான சப்த தோஷங்களும் வேதத்தில் இல்லையென்றும் நண்பர்கள் அறிவார்களாக. வேதம் பிரமாணம் என்னும் விஷயத்தில் ஒரு சிறு சரித்திரத்தையும் கூறுவோம். மணிமஞ்ஜரி 5-ம் அத்தியாயம், சுலோகம் 36.

வேதம் அப்ரமாணம் என்ற முக்கிய கொள்கையைக்கொண்ட பௌத்தமதம், ஸௌகதமதம் முதலிய மதங்கள் நம்மிந்தியாவில் உலாவிவந்தகாலத்திலும் பட்டன் (பட்டகுமாரன்) என்ற ஓர் வேதப்பிரமாண வாதி இருந்தான். அவன் ஒருஸமயம் பௌத்த மத தத்வங்களை அறிவதற்கென மாறுவேடம்பூண்டு அவர்களினிடையே ஸஞ்சரித்து அவர்களரசனிடம் கூலிவேலையில் அமர்ந்தான். ஒருநாள் அதிஉன்னதமான மாடியில் பட்டகுமாரன் அப்பௌத்தத்தலைவனுக்கு எண்ணெய் தேய்த்துக்கொண்டிருந்தான். அப்போது வேதம் அப்ரமாணம் என்ற விஷயமாய் பலத்த (வாக்யார்த்தம்) விவாதம் நடந்துகொண்டிருந்தது. அதைக் கேள்வியுற்ற பட்டன் மிகவும் துயரமுற்று கண்ணீர்ப்பெருக்கினன். அக்கண்ணீர்கள் மிகவும் உஷ்ணமாக அரசன்மீது படவே, அரசன் பட்டனின் கபடத்தையறிந்து "இவனைக் கொல்லுங்கள்! கொல்லுங்கள்!!" என்று கட்டளையிட்டான். பட்டன் திகிலடைந்து தப்பியோட வேறு வழியில்லாததால் வெகு உயரமான அம்மாடியினின்றே वेदाः प्रमाणं चेज्जीवामि "வேதம் பிரமாணமாயிருந்தால் என்னைக் காப்பாற்றட்டும்" என்று கத்திக்கொண்டு கீழே குதித்தான். அத்தருணத்தில் அவன் எலும்பு பொடிப்பொடியாக ஆகியிருக்கவேண்டுமல்லவா? அவனுக்கு ஒருவித தீங்கும் உண்டாகவில்லை. ஆனால் பூமியிலிருந்த ஒரு முளைக்குச்சி அவன் கண்ணில்பட்டு ஒரு கண்ணை இழந்தான். அச்சமயத்தில்,

वेदप्रामाण्यसन्देहात्काणोऽसीत्यशरीरवाक् ॥

வேதம் பிரமாணமாயிருந்தால்—என்று ஸந்தேகமாய்க் கூறினதால் ஒரு கண் பொட்டையானாய். வேதம் பிரமாணம்தான் நான் கட்டாயம் உயிர் தப்புவேன்" என்று உறுதியாய்ச் சொல்லியிருந்தால் இத்தீங்கும் உனக்கு ஏற்பட்டிராது. என்ற ஓர் ஆகாயவாணி உண்டாயிற்று. இச்செய்தியைக்கேட்ட அரசனும் வேதம் பிர

மாணமென்றே நம்பி அப்ரமாண வாதிகளிற் பலரை தூக்கியும் அக்நிப்ரவேசம் செய்வித்தும் பட்டனுக்கு உதவிபுரிந்தான்.

இச்சிறு சரித்திரத்தால் நாம் ஒன்றறியவேண்டும். வேதம் பிரமாணம் என்று நம்பினமாத்திரத்தினாலேயே பட்டனுக்கு எவ்வித நன்மை ஏற்பட்டது. அப்பேர்ப்பட்ட வேதத்தில் கூறியவைகளையும் சரிவர செய்துவந்தால் அளவற்ற நன்மை பெறலாம் என்பதற்கையமில்லை.

வேதங்களை நாம் ஏன் ஒப்புக்கொள்ளவேண்டும் ?

உலகத்திலுள்ள எல்லாவஸ்துக்களும் பிரமாணங்களாலேயே அறியப்படுகின்றன. அவ்விதப் பிரமாணம் மூன்றுவகைப்படும். (1) பிரத்யக்ஷம், (2) அனுமானம், (3) ஆகமம். இவைகளின் லக்ஷணங்களையும் பிரிவுகளையும் வேறு சந்தர்ப்பத்தில் ஆராய்வோம். பிரத்யக்ஷத்தினால் அறியப்படும் விஷயங்கள் சில. அனுமானத்தினால் அறியப்படுவது வேறு சில. இவ்விரண்டினாலும் சாதிக்கமுடியாதவைகளை ஆகமப்ரமாணத்தால் சாதிக்கவேண்டும். ஈசுவரன், ஸ்வர்க்கம், நரகம், புண்ணியம், பாபம் முதலியவைகளை ஆகமத்தினால்தான் அறியமுடியும். ஆகமம் இரண்டுவகைப்படும். (1) பௌருஷேயம்—புருஷனால் இயற்றப்பட்டவை (2) அபௌருஷேயம்—புருஷனால் இயற்றப்படாதவை. நாம் இதுகாறும் ஆராய்ந்த வேதங்கள் இவ்வகுப்பைச் சேர்ந்தது.

இது சம்பந்தமாக இன்னும் பல விஷயங்களை அடுத்த ஸஞ்சிகையில் ஆராய்வோம்.

(தொடரும்)

M. ராமராவ்,
ஸ்ரீ மாத்வஸபையின் காரியதரிசி,
கும்பகோணம்.

உ

சுபமஸ்து.

ஸ்ரீ சந்திரமௌளீச்வராய நம:

ஸ்ரீ காஞ்சி காமாக்ஷி அம்பாள் ஆலய ஜீர்ணோத்தாரண

ஆரம்ப முகூர்த்தப் பத்திரிகை.

कारणपराचिद्रूपा काञ्चीपुरसीम्नि कामपीठगता ।
काचन विहरति करुणा काश्मीरस्तबककोमलाङ्गलता ॥

ஆதியில் ஸ்ரீ சங்கரபகவத்பாதாசார்ய ஸ்வாமிகளவர்களால் ஸ்ரீ காஞ்சிநகரம் ஸ்ரீ சக்கரயந்திரரூபமாக நிர்மிக்கப்பட்டதென்று பிராசீனக் கிரந்தங்கள் கூறுகின்றன. ஸப்த மோக்ஷபுரிகளுக்குள் பிரதானமாகிய இவ்வண்ணமான காஞ்சி நகரத்தின் மத்தியில் ஸ்ரீ காமாக்ஷியின் ஆலயத்தையும், அதன் மத்தியில் அநாதிஸித்தமான பிலாகாச ஸ்வரூபிணியான ஸ்ரீ காமாக்ஷியின் ஸந்நிதானத்தில் ஸ்ரீ சக்கரயந்திரராஜ ஸ்வரூபமான ஸ்ரீ காமகோடி பீடத்தையும் ஸ்ரீ சங்கரபகவத்பாதாசார்ய ஸ்வாமிகளவாள் பிரதிஷ்டை செய்திருக்கிறார்கள். பூமிதேவிக்கே மத்தியமாகிற காஞ்சி ஸ்தானத்தில் வேதவேதாந்தமார்க்க ஷண்மத ஸ்தாபனத்தையும் ஸர்வக்ஞ பீடாரோஹணத்தையும் செய்து தம்முடைய மூலாம்நாய லோக குருஸ்தான பரம்பரையையும் ஸ்தாபித்தருளினார்கள்.

இவ்விதம் இந்த காஞ்சி நகரத்தை யந்திர ரூபமாக நிர்மித்து அதன்மத்தியில் ஸர்வதேவதைகளுக்கும் மேலான பராசக்தி ஸ்வரூபமான காமகோடி பீடத்தை ஸ்ரீ பகவத்பாதாள் ஸ்தாபித்த முறையை அநுஸரித்தே இன்றைக்கும் இந்நகரத்திலுள்ள சிவ விஷ்ணு குமாராதி இதர தேவாலயங்களெல்லாம் ஸ்ரீ காமகோடி பீடத்திற்கு அபிமுகமாகவே நிர்மாணம் செய்யப்பட்டு அவ்வவ்வாலயங்களின் உத்ஸவ காலங்களில் அந்தந்த சிவ விஷ்ணுவாதி மூர்த்திகள் ஸ்ரீ காமகோடி பீடஸ்தானமாகிய ஸ்ரீ காமாக்ஷிதேவியின் ஆலயத்தையே பிரதக்ஷிணம் செய்துவருகின்றன.

இவ்விதம் சாஸ்திர புராணங்களினாலும் மூகபஞ்சசதி முதலிய பக்தகோடிகளுடைய கிரந்தங்களினாலும் ஸ்துதிக்கப்பட்ட மஹிமையுடன் ஆஸேது ஹிமாசலம் பிரஸித்தமாய் விளங்கும் ஸ்ரீ காமாக்ஷியின் ஸந்நிதானம் ஸ்ரீ ஆதி சங்கரபகவத்பாதாசார்யாள் காலம்முதல் ஷை பகவத்பாதாள் அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட ஸ்ரீ காஞ்சி காமகோடிபீடத்தின் அதிபதிகளாகிய ஸ்ரீஜகத்குரு சங்கராசார்ய ஸ்வாமிகளின் பரம்பரையைச் சேர்ந்து ஷை ஸ்ரீ மடத்திலேயே ஸ்ரீ தேவியின் ஆலயத்தின் காரியங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இதை அநுஸரித்தே சுமார் 85 வருஷங்களுக்குமுன் அச்சமயம் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தில் எழுந்தருளியிருந்த ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகளால் ஸ்ரீ காமாக்ஷியின் ஆலயம் ஜீர்ணோத்தாரணம் செய்விக்கப்பட்டு மஹா கும்பாபிஷேகமும் நடப்புவிக்கப்பட்டிருக்கிறது.

தற்காலம் ஸ்ரீ காமாக்ஷி தேவியின் ஆலயத்தில் கோபுர மண்டப தடாகாதி ஜீர்ணோத்தாரணமும் ஹேமகாமாக்ஷி பிரதிஷ்டையும் அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகமும் நடத்தப்படவேண்டியதாயிருப்பதால் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி அவர்களாகிய ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகளின் ஆக்ஞையை முன்னிட்டு நாளது குரோதனஸு ஆவணிமீ 8உ (23–8–25) பாநுவாரம் சதுர்த்தி ஹஸ்த நக்ஷத்திரங்கூடிய சுபதினத்தில் உதயாதி நாழிகை 19—36-க்குமேல் 24—56-க்குள் தனுர் லக்னத்தில் ஜீர்ணோத்தாரணத் திருப்பணி ஆரம்ப முகூர்த்தம் நடத்துவதாய் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. ஷை சுபமுகூர்த்தகாலத்தில் பக்தகோடிகளான ஆஸ்திக மஹாஜனங்கள் எல்லோரும் வந்திருந்து முகூர்த்தத்தை நடப்பிவித்து திருப்பணியைப் பூர்த்திசெய்து ஸ்ரீ அம்பாள் ஸ்ரீ ஆசார்யாள் இவர்களுடைய அநுக்ரஹத்திற்கு பாத்திரர்களாகும்படி பிரார்த்திக்கப்படுகிறது.

முகாம், இளையாத்தங்குடி
குரோதனஸு
ஆடிமீ 11ம் தேதி.

ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஆக்ஞைப்படி
தேப்பெருமாநல்லூர், சிவன்
கி. குப்புஸ்வாமி ஐயர்,
ஸ்ரீ காரியம் & ஏஜண்டு.

உ.

ஸ்ரீ சந்திரமௌளீச்வராய நம:

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி அவர்களாகிய

ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் அவர்களுடைய

கும்பகோணத்தில் இருக்கும் ஸ்ரீ மடத்தின்

திருப்பணி முகூர்த்தப் பத்திரிகை.

नित्यान्नदानलसमानघनापदान गानावधानभृशविस्मयमानलोक ।
भक्तिप्रकर्षपरिपूजितचन्द्रचूड कारुण्यलब्ध निखिलाभिमतार्थसिद्धे ॥

ஈசுவராவதார ஸ்வரூபாளான ஸ்ரீ ஆதிசங்கரபகவத் பாதாசார்ய ஸ்வாமிகள் அவர்களால் ஸ்ரீ காஞ்சி நகரத்தில் ஸ்தாபிக்கப்பட்ட மூலாம்நாய ஜகத்குரு ஸ்தானமாக விளங்கும் ஸ்ரீ காஞ்சி காமகோடிபீட பரம்பரையானது நமது சோழதேசத்திலுள்ள ஸர்வ மஹா ஜனங்களுடைய விசேஷ க்ஷேமார்த்தமாக சோழ நாட்டுப் பூர்வகாலச் சத்திரபதி மஹாராஜாக்களின் பிரார்த்தனை யின்பேரில் வேதசாஸ்திர ஸம்பத்து முதலிய எல்லா வளங்களும் பொருந்தி காசி முதலிய க்ஷேத்திரங்களுள் உத்தம க்ஷேத்திரமாகிய ஸ்ரீ கும்பகோண க்ஷேத்திரத்தையே ஆஸ்தானமாக்கிக் கொண்டு அவ்விடத்திலேயே காவேரி தீரத்தில் ஸ்ரீ பகவத்பாத கட்டத்தில் நிர்மாணம் செய்யப்பட்ட ஸ்ரீ மடத்திலேயே வீற்றிருந்து விளங்கிவருகின்றது. ஷை ஸ்ரீ மடத்தை தற்காலம் ஜீர்ணோத்தாரணம் செய்யவேண்டியதாயிருப்பதால் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் அவர்களின் ஆக்ஞையை முன்னிட்டு நாளது குரோதனஹு ஆவணி மாதம் 8௳ (23—8—25) பானுவாரம் சதுர்த்தி ஹஸ்த நக்ஷத்திரங்கூடிய சுபதினத்தில் உதயாதி நாழிகை 19—36-க்குமேல் 24—56-க்குள் தனுர் லக்னத்தில் ஜீர்ணோத்தாரணத் திருப்பணி ஆரம்ப முகூர்த்தம் நடத்துவதாய் நிச்சயித்திருக்கிறது. ஷை சுபமுகூர்த்த காலத்தில் பக்தகோடிகளான ஆஸ்திக மஹா ஜனங்கள் எல்லோரும் வந்திருந்து முகூர்த்தத்தை நடப்பிவித்து ஸ்ரீ மடம் திருப்பணியையும் பூர்த்திசெய்து ஸ்ரீ ஆசார்யாளுடைய அநுக்ரஹத்திற்குப் பாத்திரர்களாகும்படி பிரார்த்திக்கப்படுகிறது

முகாம், இளையாத்தங்குடி
குரோதனஹு
ஆடி ௴ 20ம் தேதி.

ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஆக்ஞைப்படி
தேப்பெருமாநல்லூர், சிவன்
கி. குப்புஸ்வாமி ஐயர்,
ஸ்ரீ காரியம் & ஏஜண்டு.

ரஸமஞ்சரி.

வருஷந்தோறும் டிஸம்பரில் நடைபெறுகின்ற ராஜகீய மஹாஸபை வழக்கம்போல் இந்தியாவின் பல பாகங்களிலும் கூடுகின்ற முறைபற்றி) இவ்வருஷம் எந்த இடத்தில் கூடுகின்றதோ அதேவாரத்தில் 'ஆஸ்திகமத மகா நாடு' என்ற பேரோடு ஒரு, மகாநாடு கூடுவதும் "கடவுள் ஒருவரிருக்கிறார்; நன்மை செய்யுங்கள்" என்று தீர்மானிப்பதும் அதன் மாமூலான எற்பாடாகவுமிருந்து வருகின்றது. அதனால் வேறு விசேஷ நன்மை எற்படாவிட்டாலும் ஒரு ஸத்காரியப் பிரேரணையை வருஷத்தில் ஒருமுறை செய்து வருவதையேனும் நாம் பாராட்டவேண்டும். ஆனால், இந்தியாவிலுள்ள 75 லக்ஷம் பிராஹ்மணர்களுக்கும் அவரவர்களின் மதாசார்யர்களின் ஆஜ்ஞையை முன்னிட்டு "ஒரு பிரதிநிதி கான்பரன்ஸ்—ஸர்வ பிராஹ்மண மஹா ஸபை" நடக்குமாறு முயற்சித்து, அவரவர்களின் மதாசார்யர்களின் உதவியைக் கொண்டே தலைக்கட்டு 1-க்கு ரூ. 1 வீதம் வசூல்செய்து "பிராம்மணர்களின் மாணவர்களுக்கு பிரதி ஜில்லாவிலுமுள்ள நதிதீரங்களில் ஒவ்வொரு வித்யாஸ்தானங்கள் ஸ்தாபித்து, லோகவித்யை ஆத்மவித்யை இரண்டையும் போதித்துவருவதற்கு ஒரு திட்டம் செய்தால், தற்காலம் நடைபெறுகின்ற "ப்ராஹ்மணேதார்களின் எதிர்ப்பிலிருந்து" ப்ராஹ்மண ஸமூஹம் தக்க பலம்பெறும். இவ்விதப் பிரதிநிதிகளின் ஸபையில் செய்கின்ற தீர்மானம் வர்ணாச்ரமத்தை நிலைநிறுத்துவதோடு ராஜாங்கத்திலும் இதன் செல்வாக்கு ஓங்கி வளரும். ' संघशक्ति: कलौयुगे ' "கலியுகத்தில் ஸங்கத்திலேயே சக்தி அமைந்திருக்கின்றது" என்பது ஸ்ரீ வேதவியாஸ மஹர்ஷியின் திருவாக்கு. இந்த மூலமந்திரத்தை ஜபித்து இதன் பொருளை அநுஷ்டானத்தில் கொண்டுவருந்தோறும் இந்தக் கலியுகமே க்ருதயுகமாகப் பரிணமித்து வருவதை ப்ராஹ்மண ஸமூஹம் நன்குணர்ந்து லோகத்திற்கே காமதேனுவாக விளங்கும்.

முன் தெரிவித்ததுபோல் வருஷந்தோறும் ஒரு மூலதனம் எற்பட்டால் "எழுதும் சக்தியுள்ள பண்டிதர்களைக்கொண்டு" (நாவல் எழுதும் தொழிலை ஒழித்து) உத்தம நூல்களை எழுதச் செய்து, ஆங்கிலப் பள்ளிக்கூடங்களுட்பட அவர்களின் புஸ்தகங்களையே பாட புஸ்தகமாகச்செய்து, வித்யா ஸ்தானங்களைக் கைப்பற்றலாம்.

முயற்சியின் பயன் முயற்சியின் தீவ்ரத்தை யனுசரித்தே இருக்கின்றது என்ற கர்மரஹஸ்யத்தை "பகீரதப்ரயத்நம்" உணர்

த்துகின்றது. ப்ராஹ்மண ஸமூஹம் முழுதும் இந்தக் கட்டுப் பாட்டில் அடங்குவது தற்கால ப்ரயத்நத்ருஷ்டியில் ச்ரமஸாத்ய மாகப்பட்டால், (அஸாத்யம் என்று சொல்லக்கூடாது!) த்ராவிட மண்டலத்திலுள்ள த்ரிமதஸ்தர்களுமாக ஒருங்கே சேர்ந்து, ப்ரதி வருஷத்திலும் ஒவ்வொருஜில்லாக்களில் 'வர்ணாச்ரமகான்பரன்ஸ்' நடாத்தி, வீடு 1-க்கு இன்னது கொடுப்பது என்ற கட்டுப்பாடு செய்து, {அதுவும் அஸாத்யமாகத் தோன்றுமானால் பிடியரிசிக் கலயமாவது வைத்து) "ப்ராஹ்மணஜாதியின் துர்த்தசையை" நிவர்த்திசெய்யவேண்டும். ஸதுத்தேசத்தோடு முயலுகின்ற எந் தக் காரியத்திற்கும் ஸ்ரீ பரமேச்வரன் துணைசெய்யக் காத்திருக் கின்றார். यतो धर्मस्ततो जयः (கீதை)

स्थापयध्वमिदं मार्गं प्रयत्नेनापि ते द्विजाः ।
स्थापिते वैदिके मार्गे सकलं स्थापितं भवेत् ॥

ப்ராஹ்மணோத்தமர்களே! இந்த உத்தமமான—வைதிக மார்க் கத்தை உடல் பொருள் ஆவி என்ற எவற்றை தத்தஞ்செய்தாயி னும்—எவ்விதப் பிரயத்நஞ்செய்தேனும் ஸ்தாபனம் செய்யுங்கள்! வைதிகமார்க்கம் ஸ்தாபனம் செய்யப்படுமானால் சகலமும் ஸ்தா பிக்கப்பட்டதாகும். (ஸூதஸம்ஹிதை) ஈச்வர அநுக்ரஹத்தால் இந்த தர்மாஜ்ஞையை நிறைவேற்றும் சக்திவாய்ந்த எந்த மனி தன் இந்தக் கடமையை நிறைவேற்றவில்லையோ அவன் நலம் பெறான் என்ற வாக்கும் (यो हि स्थापयितुं शक्तः ....) அங்கு காணப்படுகின்றது. இந்த வேலையைச் செய்யவேண்டி யது நம்முடைய கடமை என்பதையும்,

(स्वाध्यायप्रवचनाभ्यां न प्रमदितव्यं)

என்ற வாக்கியத்தால் ச்ருதி மாதா நம்மைக் கூவி உபதேசிக்கின் றாள். ஆகவே,

कालापकर्षान्नृपविप्लवाद्वा निसर्गतोवावनतिं गतस्य ।
समुद्धृतौ भारतरत्नराशेः सद्भिर्विधेयः सततं प्रयत्नः ॥

காலப்போக்கினாலேனும், அரசியல் குழப்பத்தினாலும், இயற்கை யினாலேனும் தாழ்ந்த நிலையை யடைந்துள்ள ஆர்யவித்யாரத்தின ஸமூஹத்தை உத்தாரணஞ் செய்வதில்—(பிரகாசிக்குமாறு செய் வதில்) ஸஜ்ஜனங்கள் யாவரும் ஸதாகாலமும் ப்ரயத்நஞ்செய்ய வேண்டுமெனக் கோருகின்றேன். சுபம்.

ஸ்ரீ ஜாநகீஜாநி: